1

## 13-10-2011 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு

**தலைப்பு : சுயநிர்ணய உரிமை**

**தொடக்கவுரையாடல் : இ. தம்பையா**

* முதலாளித்துவத்தின் பொருளுற்பத்தியின் வெற்றி, முதலாளிகள் குறித்த உள்நாட்டு ஆள்புலச் சந்தையை கைப்பற்றுவதிலேயே தங்கியிருந்தது. அதற்குக் குறித்த ஆள்புலத்தில் குறித்த மொழியைப்பேசும் மக்கள் திரள் அரசியல் ரீதியாக ஐக்கியப்படுத்தப்படுவதுடன் அம்மொழியின் அபிவிருத்திக்கான தடைகள் அனைத்தும் நீக்கப்படுவது அவசியமாகும். இதுவே தேசிய இயக்கங்களின் எழுச்சிக்கான பொருளாதாரக் காரணமாகும்.

* மனித சமூக உறவிற்கு மொழி அடிப்படையாகும். மொழியின் ஒருமைப்பாடும் அபிவிருத்தியும் உண்மையான சுதந்திரமான வர்த்தக உறவுகளுக்கு முக்கியமான நிபந்தனையானது. வர்க்க வேறுபாடுகளுக்கு மத்தியிலும் பரந்தளவான ஒன்று சேர்தல், சந்தை, விற்போன், வாங்குவோனிடையே நெருங்கிய உறவை நிறுவுவதன் அவசியத்தை நவீன முதலாளித்துவம் வேண்டி நின்றது.

* இந்த அடிப்படையில் ஒவ்வொரு தேசிய இயக்கமும் தேசிய அரசை நிறுவவேண்டிய இலக்குடன் செயற்பட்டது. இது நவீன முதலாளித்துவத்தின் தேவையானது.

* இந்த வளர்ச்சிப்போக்கினாலேயே தேசங்களின் சுதந்திரம் முக்கியமாகியது. அதனடிப்படையிலேயே "தேசங்களின் சுயநிர்ணய உரிமை" என்ற கோட்பாட்டின் பிறப்பு சாத்தியமானது.

* அந்நிய தேச நிறுவனங்களிலிருந்து தேசமொன்று அரசியல் ரீதியாகப் பிரிந்து சென்று சுதந்திரமான தேச அரசை உருவாக்குவதே சுயநிர்ணய உரிமை. இது சாம்ராஜ்யங்களைத் தகர்ப்பதற்கான அரசியற் சுலோகம்.

*சுயநிர்ணய உரிமைக்கோட்பாடு 1896 இல் லண்டனில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

* 1903 ருஷ்ய வேலைத்திட்டத்தில் சுயநிர்ணய உரிமை சேர்க்கப்படுகிறது.

* 1913 ருஷ்ய கம்யூனிஸ்டுக்களின் மாநாட்டில் நிறைவேற்றப்படுகிறது.

* லெனின் கட்டுரையில் (1907) : தேசமொன்றின் சுயநிர்ணய உரிமை என்பது, தேசமொன்று அரசியல் ரீதியாகப் பிரிந்து தனியரசமைப்பதையே குறிக்கும். பிரிந்து செல்லும் உரிமையை ஆதரிப்பதென்பது சிறிய சிறிய தேசங்களாகப் பிரிந்து அரசமைப்பதை ஊக்குவிப்பதாகாது என்று கூறி இருப்பதைக் கவனிக்கவும்.

* லெனின் ரோசா லக்சம்பேர்க் க்கு பதிலளிக்கையில் "தேசங்களுக்கு பிரிந்து செல்லும் உரிமை இருக்கிறதென்பதை அங்கீகரிப்பதென்பது ஒரு குறிப்பிட்ட அடக்கப்படும் தேசத்தின் மார்க்சிஸ்டுகள் அத்தேசம் பிரிந்து செல்வதற்கு எதிராக "ஆர்ப்பாட்டம்" செய்வதைத் தவிர்ப்பதாகாது. அதாவது விவாகரத்து உரிமையை அங்கீகரிப்பதென்பது விவாகரத்துக்கு எதிராகச் செயற்படுவதைத் தடுப்பதாகாது" என்று கூறியுள்ளார்

* லெனின் : பிரிந்து செல்லும் உரிமையை ஏற்காவிட்டால் நாம் அடக்குகின்ற தேசத்தின் கைகளில் இருப்பவர்களாகின்றோம். நாங்கள் அடக்குமுறைத் தேசத்துக்கு எதிராக அடக்கப்படுகின்ற தேசத்தின் போராட்டத்திற்கு ஆதரவளிக்கின்றோம். ஆனால் அடக்கப்படுகின்ற தேசத்தின் பூர்ஷ்வாக்களின் தேசியவாதத்தை நாம் எதிர்க்கின்றோம்.

* 1913ம் ஆண்டு ரஷ்ய கம்யூனிஸ்டுக்களின் மாநாட்டுத் தீர்மானம் 4, பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கின்றது. தீர்மானம் 5, பூர்ஷ்வாக்களின் தேசியவாதச் சுலோகங்கைள்ன் கீழ் தொழிலாளர்கள் அணிதிரளக் கூடாதென எச்சரிக்கின்றது.

* "போலந்தின் பிரிந்து செல்லும் உரிமையை ஆதரிக்கும் நாம், போலந்துப் பூர்ஷ்வாக்கள் யூதர்களை அடக்குவதற்கு எதிராகவும் போராடுகின்றோம்" - லெனின்

* தேசிய இனமொன்றுக்குத் தனித் தேசிய அரசை அமைக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு.

மிகுதி அடுத்த பக்கம்..

### அடுத்து வரும் தலைப்புக்கள்

லோகாயதவாதமும் எதிர்ச்சிந்தனைகளும்.
20-10-2011 | சி. இதயராஜா

JVP அமைப்பினை விளங்கிக்கொள்ளல்.
27-10-2011 | சி. கா. செந்திவேல்



15/10

*Titus Thotawatte* (இயற்பெயர் *Emmanuel Titus de Silva* பிறப்பு ஏப்ரல் 17, 1929 (பொரல்லை) மறைவு ஒக்டோபர் 15, 2011 )

இலங்கையின் சிங்களத் திரைப்பட இயக்குநரும் படத்தொகுப்பாளருமாவார். அறுபதுகளிலும் எழுபதுகளிலும் தொழிநுட்பச் சிறப்புக்கொண்ட திரைப்படங்களை இவர் ஆக்கியளித்துள்ளார்.

சிறுவர்களுக்கான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஆக்கியளித்ததன் மூலம் இவர் மிகப்பிரபலமானார்.

பிரபலமான ஆங்கிலக் கார்ட்டூன் படங்களைச் சிங்களத்தில் மொழியாக்கம் செய்து ரூபவாகினி தொலைக்காட்சியில் ஒளிபரப்பினார். இம்மொழியாக்கங்கள் இனம் மொழி கடந்து இலங்கைச் சிறுவர்களது மனங்களைக் கொள்ளை கொண்டவையாகும். இலங்கைச்சூழலுக்கு ஏற்ற வகையில், ஆங்கிலத்திலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்டது என்ற உணர்வே தோன்றாத வகையில் கலை நேர்த்தி மிக்கவையாக இவரது மொழியாக்கங்கள் அமைந்தன.

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

**வலைத்தளம் :**
circle.thulaa.net

## சுயநிர்ணய உரிமை

முன்பக்கத் தொடர்ச்சி..

* "தேசிய இனம் என்பது, பொது மொழி, பொதுப் பண்பாடு, பொதுப்பொருளாதாரம், ஆள்புலம் என்பவற்றைக்கொண்ட மக்கள் திரள்" - ஸ்டாலின். (இந்த நிலைப்பாட்டில் காலப்போக்கில் மாற்றம் ஏற்பட்டது. அதாவது மேற்கூறப்பட்ட 4 அம்சங்களில் ஏதாவது ஒன்று அல்லது சில குறைந்தாலும், அடக்குமுறைக்கெதிராக அணி திரளும் மக்கள் திரள் தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறான தேசிய இனத்திற்கு சுயநிர்ணய உரிமை இருப்பதும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

* சுயநிர்ணய உரிமையானது
1. காலனித்துவத்திலிருந்து (ஏகாதிபத்தியத்திலிருந்து) விடுதலை அடைய வேண்டிய தேசத்திற்கு
2. தம்மை ஆக்கிரமித்துள்ள இன்னொரு நாட்டிடமிருந்து விடுதலை அடைய வேண்டிய தேசத்திற்கு
3.ஒரு நாட்டிற்குள் பேரினவாத/அடக்குமுறை தேசிய இனத்திடமிருந்து விடுதலை அடைய வேண்டிய அடக்கப்படும் தேசிய இனத்திற்கு
உரிய உரிமை ஆகும்.

* சுயநிர்ணய உரிமை என்பது பிரிந்து சென்று தனியரசமைப்பதா என்பது பற்றி ஆரம்பத்திலிருந்தே விவாதிக்கப்பட்டு வந்துள்ளது.

* லெனினும் ருஷ்ய கம்யூனிஸ்டுக்களும் சுயநிர்ணய உரிமை என்பது பிரிந்து செல்லும் உரிமை தான் என்று ருஷ்ய தேசிய வேலைத்திட்டத்தை முன்வைத்ததிலிருந்து வலியுறுத்தி வந்துள்ளனர்.

* ரோசா லக்சம்பேர்க் பிரிவினையை ஏற்காததற்கான காரணங்களாவன,

1. பிரிந்து செல்வதால் மட்டும் (பலவீனமான, சிறிய) ஒரு நாடு, பெரிய நாடுகள் போன்று பொருளாதாரத்தில் பலமாக இருக்க முடியாது.
2. அடக்கும் தேசத்தின் தொழிலாளர்களுக்கும் அடக்கபட்டும் தேசத்தின் தொழிலாளருக்குமிடையே ஜக்கியம் ஏற்படாது.
3. பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்குப் பாதகமாக இருக்கும்.
4. தேசியவாதம் நிலை நிறுத்தப்படும்

* லெனின் வழங்கிய பதிலின் அடிப்படைகள் :
1. ருஷ்யாவின் குறிப்பான சூழ்நிலையில், ருஷய சாம்ராச்சியத்துக்கு எதிராக முன்வைக்கப்படும் விடயங்களில் ஒன்று சுயநிர்ணய உரிமை.
2. சுயநிர்ணய உரிமை அதிக கூடிய ஜனநாயகத்தை உறுதி செய்து தேசியவாதத்தைப் பலவீனப்படுத்தி சோசலிசப் புரட்சிக்குச் சாதகமான சூழ்நிலையையே ஏற்படுத்தும்.
3. தேசிய இனங்களிடையே சமத்துவத்தையும் ஜனநாயகத்தையும் உறுதிப்படுத்துவதால் ஜக்கியம் வலுப்பெறும்.

* சோவியத் யூனியனின் அரசியல் யாப்பில் தேசங்கள் பிரிந்து செல்லும் உரிமையுடன் சமஷ்டியாக ஜக்கியப்பட்டிருக்கும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

* சீன கம்யூனிஸ்ட் கட்சி 1934இல் அதனுடைய வேலைத்திட்டத்தில் தேசிய இனங்கள் பிரிந்து செல்லும் உரிமையுடன் சமஷ்டியாக ஜக்கியப்பட்டிருக்கும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

* 1938இல் சீன கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்ட சீனமக்கள் குடியரசின் வரைவு யாப்பில் சீனா பல்லினங்கள் வாழும் ஒரு அரசு எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

* 1949 சீனப்புரட்சிக்குப்பின்னர் அறிமுகம் செய்யப்பட்ட அரசியல் யாப்பில் சீனா பல்லினங்கள் வாழும் ஒற்றை அரசு எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. தேசிய இனங்களுக்கு தேசிய சுயாட்சி அமைப்பு, பிராந்திய சுயாட்சி அமைப்பு, சுயாட்சி உள்ளமைப்பு, போன்றவற்றை அறிமுகம் செய்து சுயாட்சி உரிமையை உறுதி செய்துள்ளது (பிரிந்து செல்லும் உரிமை குறிப்பிடப்படவில்லை).

* சன்டனிஸ்டாவின் தலைமையிலான நிக்கரகுவாவின் யாப்பில் தேசிய இனங்கைள்ன் சுயாட்சி பல்லினங்கள் வாழும் ஒற்றை அரசு என்பதன் கீழ் உறுதி செய்யப்பட்டுள்ளது.

* இன்று எந்தவொரு நாட்டின் அரசியல் யாப்பிலும் தேசிய இனங்களின் பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமை உறுதி செய்யப்படவில்லை (விதிவிலக்கு - கனடாவின் கியூபெக் பிராந்தியம்)

* தேசிய இனங்களுக்கும் தேசங்களுக்குமான சுயநிர்ணய உரிமையை தனியரசு அமைக்காத நிலையில் உறுதி செய்ய முடியுமா?

* சுயநிர்ணய உரிமையை, தனியரசிலும் ஜக்கியப்பட்ட நாடிலும் பிரயோகிக்க முடியுமா?

* இன்று ஏகாதிபத்தியத்தின் தலையீடு/உதவி இன்றி தேசிய இனமொன்று தனியரசமைக்க முடியுமா?

* ஏகாதிபத்தியத் தலையீட்டால் தனியரசமைக்கப்படின் அந்தத் தேசிய இனம் அரசியல் ரீதியாகச் சுயாதீனமாக இருக்குமா? அப்படி இல்லாவிடின் அது சுயநிர்ணய உரிமை கொண்டதாக இருக்குமா? (எ.கா: பொஸ்னியா, சூடான்)

* சமகால சூழ்நிலையில் பிரிவினைப்போராட்டங்களால் தொழிலாள வர்க்க ஜக்கியம் சாத்தியமாகின்றதா? ஏகாதிபத்தியம் பலவீனமடைகின்றதா?

* நிலத்தொடர்ச்சியற்று வாழும் தேசிய இஅன்ங்கள் எவ்வாறு தனி நாடமைக்க முடியும்? அவ்வாறு தனியரசமைக்க முடியாவிட்டால் அவ்வினங்களுக்குச் சுயநிர்ணய உரிமை இல்லையா?

* அவ்வாறெனில் சுயநிர்ணய உரிமை அதற்போது செல்லுபடியானதா?

* செல்லுபடியானதாயின் எவ்வாறு வென்றெடுக்கப்படவேண்டும்?

## லோகாயதவாதமும் எதிர்ச்சிந்தனைகளும்

20-10-2011 அன்று உரையாடப்படவுள்ள விடயப்பரப்பு
(சி. இதயராஜா)

1. மெஞ்ஞானம் என்பது என்ன?

2. லோகாயதவாத மெஞ்ஞானம் என்பது என்ன?

3. லோகாயதவாதத்துக்கும் மார்க்சியத்துக்கும் இடையிலான உறவுகள் யாவை?

4. நடைமுறை என்றால் என்ன, தத்துவம் என்றால் என்ன?

5. பொருளாதாரம் - அரசியல் - தத்துவம் மூன்றுக்கும் இடையேயான தொடர்புகள் யாவை?

6. பொருள் - சிந்தனை அல்லது வாழ்நிலை - ஆன்மா என்பவற்றுக்கு இடையிலான தொடர்பு எத்தகையது?

7. இரட்டை வாழ்நிலை என்றால் என்ன?

8. மெஞ்ஞான ரீதியான ஆன்மீகவாதம் என்றால் என்ன?

9. பிரபஞ்சம் மாயத்தோற்றம் என்பதன் தத்துவம் யாது?

10. விஞ்ஞானமும் மெஞ்ஞானமும் கொண்ட தொடர்பு எத்தகையது?

11. மெஞ்ஞானத்தின் மூலப்பிரச்னைகள் யாவை?

12. ஆத்மீகவாதமும் லோகாயதவாதமும் எட்ட முனையும் இலட்சியங்கள் எத்தகையன?

**சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.**